
# உயரமா கட்டையா

## செயற்பாடு – 1


உயரம் குறைந்த உருவினை
நிறந்தீட்டுவோம்.




உயரம் குறைந்த உருவினை
நிறந்தீட்டுவோம்.



உயரம் கூடிய உருவினை
நிறந்தீட்டுவோம்.




உயரம் கூடிய உருவினை
நிறந்தீட்டுவோம்.



## காய்கறிகளையும் பழங்களையும் தெரிவோம் — செயற்பாடு – 02

- காய்கறிகள் மற்றும் பழங்களை பொருத்தமானவாறு கூடைகளுக்கு கோடுகளினால் இணைப்போம்.
- நிறந்தீட்டுவோம்.



## விவசாயம் மிக அருமை

## செயற்பாடு – 03

- தரப்பட்டுள்ள படங்களை நன்றாகப் பார்ப்போம்.


  ★ படத்தில் காட்டப்பட்டுள்ளவை தொடர்பாக பிள்ளையுடன் கதையுங்கள்.

  ★ ஒவ்வொரு வேலையினை செய்வதற்கு தேவைப்படும் உபகரணத்தின் பெயரை சொல்லிக்கொடுங்கள்.


- ஒவ்வொரு வேலைக்குப்பொருத்தமான உபகரணத்தை தெரிந்து இணைப்போம்.


















## நாம் சமயலறை உபகரணங்கள் செய்வோம். செயற்பாடு – 04

★ களிமண் தேடிக்கொடுங்கள்.

★ சமயலறையிலுள்ள உபகரணங்களை களிமண்ணினால் செய்ய பிள்ளைக்கு உதவுங்கள். (உதாரணம்-உரல், உலக்கை, சட்டி, முட்டி போன்றவை)

● செய்த உபகரணங்களின் பெயர்களைக் கூறுவோம்.

● கீழே தரப்பட்டுள்ள உருக்களை நிறந்தீட்டுவோம்.



# சுவையுள்ள சத்துள்ள பழச்சாறு

**செயற்பாடு – 05**

- முன் அட்டையிலுள்ள படத்தை நன்றாகப் பார்ப்போம்.
- படத்தில் உள்ளவற்றை விபரிப்போம்.
- எண்ணுவோம். அன்னாசிப்பழங்கள் எத்தனை?, மாம்பழங்கள் எத்தனை?, தர்ப்பூசணிப்பழங்கள் எத்தனை?,
- பழங்களின் படங்களை ஒட்டி புத்தகமொன்றை செய்வோம்.



## எங்களுக்கு மிக்க மகிழ்ச்சி

### செயற்பாடு – 06



- ★ இரவில் ஓய்வு நேரமொன்றை பயன்படுத்துங்கள்
- ★ பொருத்தமான இடமொன்றில் பாயொன்றில் வீட்டில் அனைவரும் அமருங்கள்.
- ★ பிள்ளையின் கையில் ஒலிவாங்கியொன்று அல்லது அதற்கு ஒத்த பொருளொன்றை கொடுங்கள்.
- ★ அனைவருக்கும் முன்னே பிள்ளை விரும்பிய நடனமொன்று, கதையொன்று, பாடலொன்று முன்வைக்குமாறு கூறுங்கள்.
- ★ அனைவரும் சேர்ந்து கைகளைத்தட்டி பிள்ளையை ஊக்கப்படுத்துங்கள்.

## ஓடுவோம் பாய்வோம் வட்டங்கள் வரைவோம்.

### செயற்பாடு – 07

- ★ பிள்ளையுடன் முற்றத்திற்குச் செல்லுங்கள்.
- ★ ஒரு வட்டத்திலிருந்து இன்னொரு வட்டத்திற்கு இலகுவாக பிள்ளை பாயக் கூடியவாறு 6 வட்டங்கள் வரையுஙகள். (உருவில் காட்டப்பட்டுள்ளவாறு)

- 6 வட்டங்களுள் ஒரு வட்டத்தின் நடுவில் நிற்போம்.
- அவ்வட்டத்தைச் சுற்றி இன்னொரு வட்டம் வரைவோம்.
- அடுத்த வட்டத்திற்குள் பாய்ந்து அவ்வட்டத்தைச் சுற்றியும் வட்டமொன்று வரைவோம்.
- இவ்வாறு 6 வட்டங்களுக்கும் பாய்ந்து வட்டத்தைச்சுற்றி வட்டம் வரைவோம்.




**வட்டங்கள் வரைவோமே**
**வட்டத்தினுள் பாய்வோமே**
**வட்டத்தைச் சுற்றி வட்டம் வரைந்து**
**வட்டத்தைச் சுற்றி ஓடுவோமே**


## இரு உருக்களும் ஒரே மாதிரியா?

செயற்பாடு – 08

- இரண்டு படங்களையும் நன்றாகப் பார்ப்போம்.
- 1 படத்திற்கு ஏற்ப 2 படத்தில் உள்ள குறைபாடுகளைத் தேடுவோம்.
- 1 படத்தைப் பார்த்து 2 படத்திலுள்ள குறைவான பகுதிகளை வரைவோம்.
- இரண்டு படங்களையும் நிறந்தீட்டுவோம், அழகைப் பார்ப்போம்.



1 படம்



2 படம்

## நீங்கள் எங்கே?


செயற்பாடு – 09

- படத்தினை நன்றாகப் பார்ப்போம். விடை கூறுவோம்.
- பூச்சாடி இருப்பது எங்கே?
- மேசைக்கு கீழ் இருப்பது என்ன?
- மேசைக்கு அருகில் இருப்பது எது?
- மேசையிலிருந்து தூரத்தில் இருப்பது எது?




# நாம் பயணம் செல்வோம்.

செயற்பாடு – 10











- தரப்பட்டுள்ள படங்களைப் பார்ப்போம்.
- படங்களின் பெயர்களைக் கூறுவோம்.
- வானத்தில் செல்லும் வாகனத்தைக் காட்டுவோம்.
- கடலில் செல்லும் வாகனத்தைக் காட்டுவோம்.
- வாகனங்களின் படங்கள் ஒட்டி புத்தகமொன்றை செய்வோம்.

★ பிள்ளையுடன் பாடலைப் பாடுங்கள்

சிக்கு புக்கு சிக்கு புக்கு ரயில் வண்டி - நீண்டு செல்லும் ரயில் வண்டி
நீண்ட தூரம் சென்றிடலாம் - சேர்ந்து நாமும் மகிழ்ந்திடலாம்


# டிரிங் டிரிங் டிரிங்

## செயற்பாடு – 11

- தரப்பட்டுள்ள படங்களைப் பார்ப்போம்.
- படங்களின் பெயர்களைக் கூறுவோம்.

★ தெரியாத படங்களை சொல்லிக் கொடுங்கள்.







★ முத்திரையொன்றை தேடிக்கொடுத்து இக்கடித உறையில் சிறு கட்டத்தினுள் ஒட்டுவதற்கு கொடுங்கள்.




★ இப்பாடலை பிள்ளையுடன் பாடுங்கள்.


டிரிங் டிரிங் டிரிங் என்று
தபால் மாமா வந்தாரு
வேகமாக ஓடுவோம்
கடிதமதை வாங்குவோம்.


பணிப்பாளர்,
முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி அதிகார சபை,
பதுளை.

## சிறுவர் நாம் பிராணிகள் ஆவோம்


**செயற்பாடு – 12**

- பிராணிகளை நிறந்தீட்டுவோம்.
- இப்பிராணிகளின் பெயர்களைக் கூறுவோம்.
- இப்பிராணிகள் செல்வதைப் பொல் நடித்துக் காட்டுவோம்.
- பிராணிகளின் படங்களை ஒட்டி புத்தகமொன்றை செய்வோம்.










# யார் இவர்?

செயற்பாடு – 13

- உருவினைப் பார்ப்போம்.
- முகத்தில் இரு கண்கள், மூக்கு மற்றும் வாயினை வரைவோம்.
- கைகளையும் கால்களையும் வரைவோம்.
- உருவினை நிறந்தீட்டுவோம்.



## சிறிய நாமும் பெரியவர் ஆவோம்

செயற்பாடு – 14


- தரப்பட்டுள்ள படங்களை நன்றாகப் பார்ப்போம்.
- அப்படங்கள் தொடர்பாகக் கதைப்போம்.
- படங்களுள் குழந்தைப்பருவ படத்தைக் காட்டுவோம்.
  - (தனது பிள்ளையின் குழந்தைப்பருவ புகைப்படங்கள் இருப்பின் அவற்றைக் காட்டி அக்காலத்தில் செய்தவை தொடர்பாக கதையுங்கள்.)
- தரப்பட்டுள்ள படங்களுள் பிள்ளை வளரும் சந்தர்ப்பங்களை தொடரொழுங்கில் காட்டுவோம்.
  - (தனது பிள்ளையின் அக்காலங்கள் தொடர்பாகவும் கதையுங்கள்)



## நாமும் வளர்கிறோம், மரங்களும் வளர்கிறது.


செயற்பாடு – 15

- போஞ்சி, கௌப்பி, பயற்றங்காய் போன்ற தானிய வகையொன்றை சூழலில் இடமுள்ள பொருத்தமானதோர் இடத்தில் அல்லது சாடியொன்றில் நடுவோம், நீர் ஊற்றுவோம்.
- கன்று வளர்வதைப் பார்ப்போம்.
- கன்றினை சித்திரமாக வரைவோம்.



## குருவிகளுக்கு வீடொன்று கட்டுவோம். செயற்பாடு – 16


- நிறத்தாளொன்றின் மீது யோகட் கோப்பையினை வைத்து வட்டங்கள் மூன்று வெட்டிக்கொள்வோம் ( உரு 1 பாருங்கள் ).
- ஒவ்வொரு வட்டத்தையும் இரண்டாக மடிப்போம்.
- கீழிருந்து மேலாக வேறுபடாதவாறு வால் பகுதியை வெட்டிக்கொள்வோம் ( உரு 2 பாருங்கள் ).
- கண் மற்றும் சொண்டினை ஒட்டுவோம். ( உரு 3 பாருங்கள் ).
- அமைத்த குருவிகளை தரப்பட்டுள்ள மரத்தில் விரும்பிய இடங்களில் ஒட்டுவோம்.



1



2



3



# நாம் பிராணிகளின் மீது அன்பு செலுத்துவோம்

## செயற்பாடு – 17

அழகு நிறைந்த சிறியதொரு கிராமத்தில் சுருதி, கவின் என்று இரு பிள்ளைகள் இருந்தார்கள். சுருதிக்கு அழகான வீட்டுத் தோட்டமொன்று இருந்தது. அங்கு வண்ண வண்ண அழகான பூக்கள், பழங்கள், காய்கறிகள் என்பன நிறைய இருந்தன. பூக்களில் தேன் குடிக்க, பழங்களை உண்ண வண்ணத்துப்பூச்சிகளும் பறவைகளும் இத்தோட்டத்திற்கு வந்தன. ஓய்வு நேரங்களில் சுருதியும் கவினும் சுருதியின் வீட்டுத் தோட்டத்தில் அமைத்துள்ள விளையாட்டு வீட்டில் விளையாடுவார்கள். நீண்ட நாட்கள் எங்கும் செல்ல முடியாது போனதால் சுருதியும் அவளின் அம்மாவும் அப்பாவும் சுருதியின் மாமா வீட்டிற்கு சென்றார்கள். அங்கு சில நாட்கள் இருந்து மீண்டும் வீடு திரும்பினர். சுருதி வீட்டிற்கு வந்த உடனேயே தோட்டத்தில் உலாவச் சென்றாள். சுருதியின் தோட்டம் பாழாகி இருந்தது.. சுருதி மிகவும் கவலைப்பட்டாள். கவலையுடன் தோட்டத்தில் இருந்த சமயம் சுருதியின் நண்பன் கவின் அங்கு வந்தான். சுருதி, நீ ஏன் கவலையுடன் இருக்கிறாய்? கவின் கேட்டான். கவின், பாருங்களே அழகாய் இருந்த எனது தோட்டம் இப்போது பாழாகி விட்டது. வண்ணத்துப்பூச்சிகள் வருவதுமில்லை பறவைகள் வருவதுமில்லை. சுருதி அவளின் கதையை கவலையுடன் கவினிடம் கூறினாள். கவினும் கவலைப்பட்டான். கவின் யோசித்தான். சுருதியிடம் இவ்வாறு கூறினான். நாம் இருவரும் சேர்ந்து தோட்டத்திலுள்ள பூஞ்செடிகள் மரஞ்செடி கொடிகளுக்கு தினமும் நீர் ஊற்றுவோம்.

இரு நண்பர்களும் கன்றுகளுக்கு தினமும் நீர் ஊற்றத்தொடங்கினர். இதோ சில காலம் சென்றதும் மரஞ்செடிகொடிகள், பூக்கள் சிரிக்கத்தொடங்கின. பூக்கள் பூத்து காய்கள் காய்த்து எங்கும் வாசம் வீசியது. வாசத்தினூடே வண்ணத்துப்பூச்சிகள், பறவைகள் ஒவ்வொன்றாக வரத்தொடங்கின. இதைக்கண்டு இருவரும் மகிழ்ந்தார்கள். சுருதிக்கு இன்னொரு யோசனை வந்தது. கவின், தோட்டத்திற்கு வரும் பிராணிகளுக்கு உணவு வைக்க உணவுத்தட்டொன்றை அமைப்போமா? அப்போது நிறைய வண்ணத்துப்பூச்சிகளும் பறவைகளும் வருமல்லவா? சுருதி சொன்னாள். இருவரும் சேர்ந்து உணவுத்தட்டொன்றை செய்து தோட்டத்தின் ஓரத்திலுள்ள பலா மரத்தில் அதை பொருத்தினார்கள். பொறு, நான் வீட்டினுள் சென்று சிறிது உணவு எடுத்து வருகிறேன். சுருதி வீட்டினுள் ஓடிச்சென்று உணவு கொண்டு வந்தாள். கவின் தட்டில் உணவை வைத்தான். சுருதியும் கவினும் மரமொன்றின் பின்னால் மறைந்திருந்து சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தனர். உணவைக்கண்டு அணில் குஞ்சுகளும் பறவைகளும் உணவுத்தட்டருகே வந்தன. அவை உணவு உண்பதைக்கண்டு இருவரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

எனவே சிறுவர்களாகிய நாமும் சுருதியையும் கவினையும் போல பிராணிகளையும் சூழலையும் நேசிப்போம்.



- ★ இக்கதையினை பிள்ளைக்கு சொல்லிக் கொடுங்கள்.
- ★ பிள்ளையுடன் சேர்ந்து பிராணிகளுக்கு உணவுத்தட்டொன்றை அமைத்து பொருத்தமான இடத்தில் வையுங்கள்.
- ★ தினமும் பிராணிகளுக்கு உணவு வைக்க பிள்ளைக்கு உதவுங்கள்.

## எனது கையின் வடிவங்கள். செயற்பாடு – 18

- நீலத்தூள், அல்லது நீர்ச்சாயம் தேடிக்கெள்வோம்.
- அதனை தட்டொன்றில் கரைத்துக்கொள்வோம். (பிள்ளையின் உள்ளங்கையில் நிறம் ஒட்டுமாறு)
- கரைத்த சாயத்தின் மீது உள்ளங்கையை வைப்போம்.
- சாயம் பட்ட உள்ளங்கையை தரப்பட்டுள்ள வெற்றுக்கூட்டினுள் வைப்போம்.
- இவ்வாறு தாள் முழுவதும் உள்ளங்கையினை பல தடவைகள் வைப்போம். அழகு பார்ப்போம்.

# படங்கள் ஒட்டுவோம்

செயற்பாடு - 19

★ தரப்பட்டுள்ள படத்தாளில் உள்ள உருக்களை வெட்டி பொருத்தமான இடங்களில் ஒட்டுவோம்.

- படத்தில் உள்ளவற்றை வியரிப்போம்.
- பிராணிகளின் பெயர்களைக் கூறுவோம்.
- கோழிக் குஞ்சுகள் எத்தனை?
- மேகத்தின் நிறம் என்ன?



## பகுதிகளை ஒட்டி உருவினை பூர்த்தி செய்வோம்.

**செயற்பாடு - 20**



* தரப்பட்டுள்ள படத்தாளில் உள்ள உருவின் பகுதிகளை வெட்டிக் கொள்வோம்.
* தரப்பட்டுள்ள ஆமையின் படத்தினைப் பார்த்து பொருத்தமானவாறு ஒட்டுவோம்.

படத்தாள்



